# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110262

1. District மாவட்டம் Theni District PS காவல்நிலையம் V&AC, Theni Year ஆண்டு 2020 FIR No முதகஅ எண் 01/20 Date நாள் 23.01.2020

2. (i) Act சட்டம் Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள் 7, 7(A)
(ii) Act சட்டம் as Amended by the Prevention Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 11.01.2020 Date to நாள் வரை 13.01.2020, 22.01.2020
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.01.2020 Time நேரம் 07.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் 09.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 15 Kms East.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o The Village Administrative Officer, Thimmarasanayakanur Bit-I Village, Andipatty (TK), Theni District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. Muthupandi
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Pethusamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1970
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி 2/183/A, Chella Nadar Street, Veerapandi, Thimpur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tr. Kalidoss, Village Administrative Officer, Thimmarasanayakanur Bit-I Village, Andipatti Taluk, Theni District.
(2) Tr. Kumar, Temporary staff, O/o the V.A.O, Thimmarasanayakanur Bit-I Village, Andipatty Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Computer typed Separate sheet enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23·01·2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10·30 Hrs.

Name: பெயர் R. GEETHA
Rank: நிலை ........................ No. எண் ........
Inspector of Police
VSAC, Theni

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2020-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது: தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 23.01.2020-ம் தேதி 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திருப்பூர் மாவட்டம், வீரபாண்டி, செல்லநாடார்தெரு, க.எண்.2/183/A என்ற முகவரியில் குடியிருந்து வரும் பெத்துசாமி மகன் திரு.P.முத்துப்பாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேலேகண்ட முகவரியில் குடியிருந்து டெய்லராகப் பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த ஊர் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, T.சுப்புலாபுரம் கிராமம் ஆகும். அங்கே எனக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்ட புஞ்சைநிலம் சர்வே எண்.318/3-ல் சுமார் 49 செண்ட் நிலம் உள்ளது. மேற்படி நிலமானது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, திம்மரசநாயக்கனூர் பிட்-1 கிராம நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டது. பூர்வீக நிலமானது எனது தாத்தா பெருமாள்நாயுடு அவர்களின் வாரிசான எனது தந்தை பெத்துசாமி, சித்தப்பாக்கள் சின்னச்சாமி, இராமர், தனிக்கொடி மற்றும் துரைச்சாமி ஆகியோர்களுக்கு 1970-ம் ஆண்டு பாகவிஸ்தி செய்யப்பட்டது. எனது அப்பா பெத்துசாமியின் பங்கிலிருந்த மேற்படி சொத்தை குடும்ப ஏற்பாடாக 1979 ஆம் ஆண்டு நான் மைனராக இருந்தபோது எனது அண்ணன் பெத்துசாமி மற்றும் எனது தாயார் குருவம்மாள் ஆகியோர் சேர்ந்து எனக்கு தானசெட்டில்மென்டாக பதிவுசெய்யப்பட்டதாகும். எனது சித்தப்பா சின்னச்சாமி அவரது தம்பிகளான இராமர், தனிக்கொடி மற்றும் துரைச்சாமி ஆகியோர்களின் சொத்துக்களை விலைக்கு வாங்கிவிட்டார். பூர்வீக சொத்தில் எனக்கு ஒருபாகமும், எனது சித்தப்பா சின்னச்சாமிக்கு நான்கு பாகமும் இருந்தது. கடந்த 2000 ஆம் ஆண்டு கணினி இணைப்பின்போது எனது நிலத்திற்கும் சேர்த்து மொத்த பட்டாவாக எனது சித்தப்பா சின்னச்சாமி என்பவரின் பெயரில் பட்டாவாக உள்ளது. நான் மேற்படி பட்டாவில் பத்திரத்தின்படி எனது பெயரையும் இணைக்க திருப்பூரிலிருந்து ஆன்லைன் மூலம் 09.01.2020 ஆம் தேதி மனு எண்.2020/0103/25/041064 மூலம் பட்டா பெயர்மாறுதலுக்காக விண்ணப்பித்தேன். அதற்கு அன்றைய தினமே ஒப்புகைச்சீட்டு எனக்கு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்புகைச்சீட்டுடன் கடந்த 11.01.2020 ஆம் தேதி காலை 10.30 மணி சுமாருக்கு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா அலுவலத்திற்குச் சென்று துணை தாசில்தார் அவர்களை பார்த்து மேற்படி ஒப்புகைச்சீட்டு மற்றும் விண்ணபத்தையும் கொடுத்தேன். அவர் என்னை மேற்படி நிலமானது ஆண்டிபட்டி தாலுகா, திம்மரசநாயக்கனூர் பிட்-1 கிராமத்தில் வருவதால் நீங்கள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரைச் சென்று பாருங்கள் என்று கூறினார். நானும் உடனே கிளம்பிச்சென்று மதியம் சுமர் 12.00 மணிக்கு திம்மரசநாயக்கனூர் பிட்-1 கிராம நிர்வாக அலுவலர் திரு.காளிதாஸ் அவர்களை சந்தித்து உரிய ஆவணங்களைக் கொடுத்து எனக்கு பட்டா குறித்துக் கேட்டேன். அதற்கு அவர் நான் பட்டாமாறுதல் செய்ய ரூ.22,000/- செலவாகும் என்று சொன்னார். நான் இது அரசுக்கு செலுத்த வேண்டிய பணமா என்று கேட்டேன்.

அதற்கு அவர் என்னையா, விபரம்புரியாத ஆளாஇருக்க. இது உனக்கு பட்டாமாறுதல் செய்துகொடுப்பதற்கு எனக்கு ரூ.20,000/-மும் மற்றும் என்னிடம் சம்பளமில்லாமல் வேலைபார்த்துவரும் இரண்டு நபர்களுக்கு தலா ரூ.1,000/- ஆகும் என்றும் கூறினார். நான் கூலிவேலை செய்கிறேன் என்னால் அவ்வளவு பணம் தரஇயலாது என்றுகூற, அவர் நான் சொன்ன பணத்தை கொண்டுவந்தால் தான் உனது வேலையை முடித்துதர முடியும் என்று கராறாகச் சொல்லி ரூ.22,000/- பணத்தை கொண்டுவந்து அவரது அலுவலகத்தில் தற்காலிகமாக வேலைபார்த்து வரும் குமார் என்பவரிடம் கொடுக்குமாறு கூறினார். நான் பணம் புரட்டிக்கொண்டு வருவதாகக்கூறி வந்துவிட்டேன். மீண்டும் 13.01.2020 ஆம் தேதி கிராம நிர்வாக அலுவலரை அவரது தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரை சந்திக்க விரும்புவதாகக் கூறினேன். அதற்கு அவர் தான் ஆண்டிபட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் இருப்பதாகவும், அங்கு வந்து தன்னைப் பார்க்கும்படியும் கூறினார். அதன்படி நான் அன்றையதினம் மதியம் சுமார் 3 மணிக்கு அவரை அங்கு சந்திக்கச் சென்றபோது கிராம நிர்வாக அலுவலரிடம் தற்காலிகமாக பணிபுரியும் குமார் என்பவர் அங்கு இருந்தார். கிராம நிர்வாக அலுவலர் வெளிஅலுவலாக இருப்பதாவும் தன்னிடம் அவர்சொன்ன தொகை ரூ.22,000/-யை வாங்கி வைக்கச் சொன்னதாகச் சொன்னார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் புரட்ட இயலவில்லை கொஞ்சம் குறைத்துக் கொள்ளும்படி கூறினேன். அதற்கு அவர் மீண்டும் VAO-விடம் தொலைபேசியில் பேசிவிட்டு ரூ.4000/- குறைத்துக் கொண்டு ரூ.18,000/- கொண்டுவரும்படி கூறினார். நான் பணம் புரட்டிக்கொண்டு பொங்கல் முடித்து வருவதாகச் சொல்லிவிட்டு திருப்பூருக்குச் சென்றுவிட்டேன். மீண்டும் 22.01.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு VAO -வைச் சந்திக்க அவரது அலுவலகம் சென்றேன். அப்போது அவர் அலுவலத்தில் இல்லை, சுமார் ½ மணிநேரம் கழித்து VAO அலுவலகம் வந்து, எனது ஆவணங்களை சரிபார்த்துவிட்டு சாட்சிகள் யாரும் உடன்வரவில்லையா என்று கேட்டார். அதற்கு நான் திருப்பூரிலிருந்து நேராக இங்குதான் வருகிறேன் என்றும் தங்களிடம் விபரம் தெரிந்துகொண்டு சாட்சிகளை அழைத்துவரலாம் என்று நினைத்தேன் என்றும் கூறினேன். அதற்கு VAO சாட்சிகளை அழைத்துக்கொண்டு நான் கேட்ட பணம் ரூ.18,000/-த்தை எடுத்துக்கொண்டு ஆண்டிபட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டார். நான் T.சுப்புலாபுரம் சென்று எனது சித்தப்பா சின்னச்சாமியின் மகன் குணசேகரனை சாட்சியாக அழைத்துக்கொண்டு ஆண்டிபட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கு VAO இல்லை, தற்காலிக அலுவலர் குமார் என்பவர் சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார். பின்னர் எனது சித்தப்பா மகன் குணசேகரன் வீட்டிற்குச் சென்றுவிட்டார். பின்னர் சுமார் மாலை 5.30 மணிக்கு ஆண்டிபட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு VAO வந்து நான் கேட்ட பணம் ரூ.18,000/- கொண்டு வந்திருக்கின்றீர்களா என்று கேட்டார். அதற்கு நான் பணத்தை சிறிது குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு VAO தனது உதவியாளர் குமாரிடம் எவ்வளவு பணம் சொல்லியிருக்கிறாய் என்று கேட்டார். குமாரும் ரூ.18,000/- சொல்லியிருந்தேன் என்றும் தற்போது அதிலும் குறைக்கச் சொல்கிறார் என்றும் கூறினார். VAO மீண்டும் ரூ.2,000/- குறைத்து ரூ.16,000/-த்தை 23.01.2020-ம் தேதி காலை 10.30 மணிக்கு ஆண்டிபட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்து குமாரிடம் கொடுக்கும்படியும், பணம் கொடுத்தால் தான் உனது பெயரை பட்டாவில் இணைக்க முடியும் என்றும் கூறினார். எனக்கு நியாயமாக கிடைக்க

வேண்டிய பட்டாவைப் பெறுவதற்கு வி.ஏ.ஓ.விற்கு லஞ்சம் ரூ.16,000/- கொடுக்க மனமில்லை. எனவே எனக்கு பட்டா மாறுதல் செய்ய ரூ.16,000/- லஞ்சம் கேட்ட திம்மரசநாயக்கனூர் பிட்-I VAO காளிதாஸ் மற்றும் அவரது தற்காலிக உதவியாளர் குமார் ஆகியோர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க புகார்மனு, நான் கிராம நிர்வாக அலுவலரிடம் சமர்ப்பித்த ஆவணங்களின் நகல்கள் கிராம நிர்வாக அலுவலர் லஞ்சமாகக் கேட்ட பணம் ரூ.16,000/-த்துடன் இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு
Sd/-xxxxxx (P.முத்துப்பாண்டி, 23.01.2020)

Sir, Received the complaint on 23.01.2020 at 07.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources, complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Theni V&AC Cr.No.01/2020, u/s 7, 7(A) of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 23.01.2020 at 09.00 hrs and took up investigation.

Original FIR along with Original complaint of Tr.P.Muthupandi, S/o Pethusamy, 2/183/A, Chella Nadar Street, Veerapandi, Tirupur District and with the relevant documents is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Theni and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai

23/1/2020

(R.Geetha)
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Theni District.